


■ சென்னைக்கு, நேற்று வந்த பிரதமர் நரேந்திர மோடி, 8,126 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை துவக்கி வைத்தார். பின், முதல்வர் இ.பி.எஸ்., மற்றும் துணை முதல்வர் பன்னீர்செல்வம் கைகளை பிடித்து உயர்த்திக்காட்டி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். அருகில், கவர்னர் பன்வாரிலால் புரோஹித், சபாநாயகர் தனபால்.

# ரூ.8,126 கோடி மதிப்பிலான திட்டங்கள் துவக்கம்

## தமிழக விவசாயிகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி பாராட்டு

**சென்னை, பிப். 15–** சென்னைக்கு, நேற்று வந்த பிரதமர் நரேந்திர மோடி, 8,126 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை துவக்கி வைத்தார்.

''உணவு தானிய உற்பத்தியிலும், தண்ணீரை முறையாக பயன்படுத்துவதிலும், தமிழக விவசாயிகள் சிறப்பாக செயல்படுகின்றனர்,'' என்றும், அவர் பாராட்டினார்.

பிரதமர் மோடி நேற்று காலை சென்னை வந்தார்.

நேரு ஸ்டேடியத்தில் நடந்த விழாவில், 3,770 கோடி ரூபாய் மதிப்பிலான, வண்ணாரப்பேட்டை முதல் விம்கோ நகர் வரையிலான, சென்னை மெட்ரோ ரயில் விரிவாக்கம்; கல்லணை கால்வாய் விரிவாக்க திட்டம் உள்ளிட்ட, 8,126 கோடி ரூபாய் மதிப்பிலான, ஆறு திட்டப்பணிகளை துவக்கி வைத்தார்.

விழாவில், பிரதமர் மோடி பேசியதாவது:

வணக்கம் சென்னை, வணக்கம் தமிழ்நாடு. நான் சென்னையில் இருப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். எனக்கு சிறப்பான வரவேற்பு அளித்த, சென்னை மக்களுக்கு நன்றி. சென்னை நகரம் உற்சாகமும், சக்தியும் மிக்கது. இது, அறிவு மற்றும் படைப்பு திறன் உடைய நகரம்.

இன்று பல்வேறு உள்கட்டமைப்பு திட்டங்களை, இந்த நகரில் துவக்கி வைத்துள்ளேன். அவை, உள்நாட்டு தயாரிப்பில், மேம்பாடு மற்றும் புதிய வகை கண்டு பிடிப்புகளின் சின்னங்களாக உள்ளன. இந்த திட்டங்கள், தமிழகத்துக்கு இன்னும் வளர்ச்சியை தரும்.

### 2.27 லட்சம் ஏக்கர்

தற்போது அடிக்கல் நாட்டப்பட்ட, கல்லணை கால்வாய் விரிவாக்க திட்டம், 630 கி.மீ., நீளத்தை உள்ளடக்கியது.

இந்த திட்டத்தால், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டையில், 2.27 லட்சம் ஏக்கர் நிலப் பரப்பில் விவசாயம் மேம்படும்.

உணவு தானிய உற்பத்தி மற்றும் தண்ணீரை சிறப்பாக பயன்படுத்துவதில், தமிழக விவசாயிகளை பாராட்ட விரும்புகிறேன்.

தமிழகத்தின் நெற்களஞ்சியத்தின் முக்கிய வாழ்வாதாரமாக, கல்லணை கால்வாய் திகழ்கிறது.

இந்த அணையானது, இந்தியாவின் 'ஆத்ம நிர்பார் பாரத்' என்ற, சுயசார்பு திட்டத்தை பிரதிபலிப்பதாக உள்ளது.

### அவ்வை பாட்டி கூற்று

தமிழ் புலவர் அவ்வையாரின் வார்த்தைப்படி, வரப்பு உயர நீர் உயரும்; நீர் உயர நெல் உயரும்; நெல் உயர குடி உயரும், குடி உயர கோல் உயரும்; கோல் உயர கோன் உயரும். அதாவது, நீர் மட்டம் உயரும் போது,

தொடர்ச்சி 15ம் பக்கம்

## 'இலங்கை தமிழர்களுக்கு சம உரிமை'

பிரதமர் மோடி மேலும் பேசியதாவது:

இலங்கையில் வாழும், தமிழ் சகோதர – சகோதரிகளின் நலனை காப்பதில், மத்திய அரசு கவனமாக செயல்படுகிறது. இலங்கையின் யாழ்ப்பாணத்துக்கு சென்ற முதல் இந்திய பிரதமர் நான் என்பதில், பெருமை கொள்கிறேன்.

முந்தைய அரசுகளை விட, எங்கள் அரசு, இலங்கை தமிழர்களுக்கு அதிக நலத் திட்டங்களை செய்துள்ளது. வடகிழக்கு இலங்கையில் இடம் பெயர்ந்த தமிழர்களுக்காக, 50 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இலவச ஆம்புலன்ஸ் வாங்க நிதி அளித்துள்ளோம். டிக்கோயாவில் மருத்துவமனை கட்டப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் இடையேயான ரயில் போக்குவரத்து, மறு கட்டமைப்பு செய்யப்பட்டுள்ளது.

சென்னை – யாழ்ப்பாணம் இடையே விமான போக்குவரத்து துவங்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண கலாசார மையம் கட்டப்பட்டுள்ளது; அது, விரைவில் திறக்கப்படும்.

தமிழர்களின் உரிமை விஷயத்தில், இலங்கை தலைவர்களுடன் தொடர்ந்து பேசி வருகிறோம். அங்கு வசிக்கும் தமிழர்கள் சம உரிமை, நீதி, அமைதி மற்றும் கண்ணியத்துடன் வாழ்வை உறுதி செய்யும் வகையில் செயல்படுகிறோம்.

இவ்வாறு அவர் பேசினார்.